DEPOSITION OF WITNESS.

IN THE COURT OF THE PRINCIPAL DISTRICT COURT, SIVAGANGAI

S.C.No. 70/2021

PROSECUTION WITNESS No - PW-5

| | | | |
|---|---|---|---|
| Name : | புவனேஷ்வரன் | Caste: | |
| Father Name | | Calling: | |
| Village: | | Religion: | |
| Taluk: | | Age: | |

Solemnly affirmed in accordance with the provisions of the Oaths Act, 1969 (Central Act 44 of 1969) on the 23rd day of October 2024.

எதிரிகள் நீதிமன்றத்தில் நேரில் ஆஜர்.

**முதல் விசாரணை :**

1)எனக்கு சொந்த ஊர் பாப்பாக்குடி. நான் தற்போது பசுமலை கல்லூரியில் படித்து வருகிறேன். வழக்கில் இறந்து போன இராமராஜன் எனக்கு அண்ணன் முறையாவார். தற்போது எனக்கு 18 வயதாகிறது. ஆஜர் எதிரிகளை தெரியும். அவர்கள் எங்கள் ஊர்காரர்கள் தான். கடந்த 19.06.2021-ம் தேதி காலை 5.00 மணியளவில் நான் காலை உபாதைகளை களிப்பதற்காக எங்கள் ஊர் மண்புழு உரக்கிடங்கு பக்கம் சென்றேன். அப்போது அங்கு நாய் குரைத்துக்கொண்டிருந்தது. நான் என்னவென்று அங்கு பார்த்தபோது இராமராஜ் என்பவர் பின்கழுத்து,வலது பக்க கழுத்து, முன் பக்க கழுத்து. வலது பக்கம் கன்னம் ஆகியவற்றில் வெட்டு காயத்துடன் இறந்துகிடந்தார். நான் முதல் நாள் இரவில் சந்தோசும், சதீஸ்குமாரும் இறந்த இராமராஜ் சத்தம் போட்டுக்கொண்டிருந்ததால் இந்த சம்பவம் நடந்திருக்கலாம் என்று எனது பெரியம்மாள் ஜானகிஅம்மாளிடம் இறந்துகிடந்ததை பார்த்ததாக விவரத்தை சொன்னேன். இது சம்மந்தமாக போலீசார் என்னை விசாரித்தார்கள். எனது அண்ணனுக்கும் முதல் எதிரி சந்தோசின் தாயாருக்கும் கள்ளத்தொடர்பு என்ற காரணத்தால் எனது அண்ணன் கொலை செய்யப்பட்டார் என பின்னர் விசாரணையில் தெரிந்துகொண்டேன். இராமராஜனின் தாயார் முத்துலெட்சுமி புகார் தெரிவித்திருந்தார்.

**எதிரிகள் தரப்பு குறுக்கு விசாரணை:**

இறந்துகிடந்த விவரத்தை எனது பெரியம்மா ஜானகி அம்மாளிடம் சொன்ன விவரத்தை போலீசார் விசாரணையில் சொல்லியுள்ளேன்.

SWARNAM J NATARAJAN

Digitally signed by SWARNAM J NATARAJAN
Date: 2024.10.23 17:46:18 +0530

**<u>மறு விசாரணை</u>**. இல்லை

சாட்சி கூறியதை என் வாய்மொழிப்படி தட்டச்சரால் நேரடியாக கணிணியில் தட்டச்சு செய்யப்பட்டு, சாட்சியிடம் படித்துக் காட்டி, அவரால் சரியென்று ஒப்புக் கொள்ளப்பட்ட பின்னர் அவரது கையெழுத்து பெறப்பட்டது.

SWARNAM J NATARAJAN

Digitally signed by SWARNAM J NATARAJAN
Date: 2024.10.23 17:46:25 +0530

முதன்மை மாவட்ட மற்றும் அமர்வு நீதிபதி,
சிவகங்கை

DEPOSITION OF WITNESS.

IN THE COURT OF THE PRINCIPAL DISTRICT COURT, SIVAGANGAI

S.C.No. 70/2021

PROSECUTION WITNESS No - PW- 6

| | | | |
|---|---|---|---|
| Name : | விக்னேஷ்வரன் | Caste: | |
| Father Name/Husband name | | Calling: | |
| Village: | | Religion: | |
| Taluk: | | Age: | |

Solemnly affirmed in accordance with the provisions of the Oaths Act, 1969 (Central Act 44 of 1969) on the 23rd day of October 2024.

எதிரிகள் நீதிமன்றத்தில் நேரில் ஆஜர்

**முதல் விசாரணை :**

1) நான் பாப்பாகுடியில் குடியிருந்து வருகிறேன். நான் மதுரை தியாகராஜா கல்லூரியில் பி.ஏ படித்துக்கொண்டிருந்தேன். இறந்து போன இராமராஜன் எனது பெரியம்மா மகன். ஆஜர் எதிகள் சந்தோஷ் மற்றும் கணேஷ்குமார் இருவரையும் தெரியும். எங்கள் ஊரைச்சேர்ந்தவர்கள். போலீசார் இது சம்மந்தமாக விசாரித்தார்கள். எனது தம்பி அ.சா.5 புவனேஷ்வரன் காலை 19.06.2021-ம்தேதியன்று இயற்கை உபாதை கழிப்பதற்காக ஊரணி அருகில் உள்ள மண்புழு உரக்கிடங்கு அருகில் சென்றார். அங்கு நாய் குலைப்பதை பார்த்து அங்கு எனது அண்ணன் இராமராஜன் இரத்த வெள்ளத்தில் இறந்து கிடந்தார். எனது அண்ணனின் பிரேதத்தை எனது உடன்பிறந்த தம்பி புவனேஷ்வரன் தான் முதலில் பார்த்தது. ஊரில் வந்து அவர் அவ்வாறு பார்த்த விவரத்தை சொல்ல நாங்கள் எல்லோரும் ஓடிச்சென்று பார்த்தோம். அப்போது காலை சுமார் 8.00 மணி இருக்கும். இராமராஜன் இறந்ததற்கான காரணம் தெரிந்துகொண்டேன். சந்தோசின் தாயார் சித்ராவுடன் இராமராஜன் கள்ளத்தொடர்பில் இருந்ததன் காரணமாக எனது அண்ணன் கொலை செய்யப்பட்டுள்ளார். இராமராஜன் சென்னையில் அம்மையப்பன் கம்பெனியில் வேலை செய்து வந்தார். 4 நாட்களுக்கு முன்பு அவரது அக்கா காளீஸ்வரி வீட்டுக்காரர் இறந்தது தொடர்பாக ஊருக்கு வந்தார். வேறு எந்த விவரமும் நான் பார்க்கவில்லை.

SWARNAM J NATARAJAN  Digitally signed by SWARNAM J NATARAJAN Date: 2024.10.23 17:46:32 +0530

**எதிரிகள் தரப்பு குறுக்கு விசாரணை:**

சம்பவம் குறித்து எனக்கு நேரடியாக தெரியாது. எனது தம்பி தகல் சொல்லும் போது நான் வீட்டில் இருந்தேன்.

**மறு விசாரணை**. இல்லை

சாட்சி கூறியதை என் வாய்மொழிப்படி தட்டச்சரால் நேரடியாக கணிணியில் தட்டச்சு செய்யப்பட்டு, சாட்சியிடம் படித்துக் காட்டி, அவரால் சரியென்று ஒப்புக் கொள்ளப்பட்ட பின்னர் அவரது கையெழுத்து பெறப்பட்டது.

SWARNAM J NATARAJAN
Digitally signed by SWARNAM J NATARAJAN
Date: 2024.10.23 17:46:40 +0530

முதன்மை மாவட்ட மற்றும் அமர்வு நீதிபதி,
சிவகங்கை

DEPOSITION OF WITNESS.

IN THE COURT OF THE PRINCIPAL DISTRICT COURT, SIVAGANGAI

S.C.No. 70/2021

PROSECUTION WITNESS No - PW- 7

| | | | |
|---|---|---|---|
| Name : | ஹரிகிருஷ்ணன் | Caste: | |
| Father Name/Husband name | | Calling: | |
| Village: | | Religion: | |
| Taluk: | | Age: | |

Solemnly affirmed in accordance with the provisions of the Oaths Act, 1969 (Central Act 44 of 1969) on the 23rd day of October 2024.

எதிரிகள் நீதிமன்றத்தில் நேரில் ஆஜர்

**முதல் விசாரணை :**

1) நான் பாப்பாக்குடியிலிருந்து வருகிறேன். பால்சீலிங் வேலை செய்துவருகிறேன். பாலமுருகன் எனது உடன்பிறந்த தம்பி. இராமராஜன் என்பவர் 19.06.2021 ம் தேதியன்று கொலை செய்யப்பட்டதாக கேள்விபட்டு நான் சம்பவ இடத்திற்கு நான் போனேன். போகும் வழியில் கூட்டமாக இருந்தது. போலீசார் அங்கிருந்தார்கள். நான் காலை 9.00 மணிக்கு சம்பவ இடத்திற்கு சென்றேன். போலீசார் தயாரித்த மகஜரில் நான் கையெழுத்து போட்டேன். போலீசார் சம்பவ இடத்தில் சேகரித்த பொருட்களை கைப்பற்றும் போதும் நான் கையெழுத்து போட்டேன். பார்வை மகஜரில் நான் கையெழுத்து போட்டேன். பார்வை மகஜர் **அ.சா.ஆ. 4**. குறியீடு செய்யப்படுகிறது. மாதிரி வரைபடம் **அ.சா.ஆ. 5**. குறியீடு செய்யப்படுகிறது. இரத்தம் பட்ட சிமெண்ட் தரை சிறிதளவு. மாதிரி சிமெண்ட் தரை சிறிதளவு **சா.பொ.4 மற்றும் 5**. போலீசார் என்னை விசாரித்தார்கள். அந்த ஆவணத்தில் என்ன எழுதப்பட்டிருந்தது என்று பார்த்தேன்.

**எதிரிகள் தரப்பு குறுக்கு விசாரணை:**

என்னென்ன பொருட்கள் கைப்பற்றப்பட்டது என்று எனக்கு தெரியாது. நான் கையெழுத்திட்ட ஆவணங்களில் என்ன எழுதப்பட்டிருந்தது என்று படித்து பார்க்க அவகாசம் இல்லை. எனவே அதில் என்ன எழுதப்பட்டிருந்தது என்றும் தெரியாது. சொன்னது போல் சொன்ன நேரத்தில் சொன்ன இடத்தில் கையெழுத்திடவில்லை என்றும், காவல்நிலையத்தில் வைத்து கையெழுத்து போட்டுவிட்டு தற்போது பொய் சாட்சியம் அளிக்கிறேன் என்றால் சரியல்ல.

SWARNAM J NATARAJAN

Digitally signed by SWARNAM J NATARAJAN
Date: 2024.10.23 17:46:47 +0530

**<u>மறு விசாரணை</u>**. இல்லை

சாட்சி கூறியதை என் வாய்மொழிப்படி தட்டச்சரால் நேரடியாக கணிணியில் தட்டச்சு செய்யப்பட்டு, சாட்சியிடம் படித்துக் காட்டி, அவரால் சரியென்று ஒப்புக் கொள்ளப்பட்ட பின்னர் அவரது கையெழுத்து பெறப்பட்டது.

SWARNAM J NATARAJAN

Digitally signed by SWARNAM J NATARAJAN
Date: 2024.10.23 17:46:52 +0530

முதன்மை மாவட்ட மற்றும் அமர்வு நீதிபதி,
சிவகங்கை

DEPOSITION OF WITNESS.

IN THE COURT OF THE PRINCIPAL DISTRICT COURT, SIVAGANGAI

S.C.No. 70/2021

PROSECUTION WITNESS No - PW- 8

| | | | |
|---|---|---|---|
| Name : | உச்சிமுத்து | Caste: | |
| Father Name/Husband name | | Calling: | |
| Village: | | Religion: | |
| Taluk: | | Age: | |

Solemnly affirmed in accordance with the provisions of the Oaths Act, 1969 (Central Act 44 of 1969) on the 23rd day of October 2024.

எதிரிகள் நீதிமன்றத்தில் நேரில் ஆஜர்

**<u>முதல் விசாரணை :</u>**

1) நான் பாப்பாகுடியில் குடியிருந்து வருகிறேன். நான் மதுரை ரிங்க்ரோட்டில் கடையில் வேலை செய்து வருகிறேன். இறந்து போன இராமராஜ் தெரியும். அவர் எனது சொந்தக்காரர். ஆஜர் எதிரிகள் தெரியும். எங்கள் ஊரைச்சார்ந்தவர்கள். நான் பெரும்மாலும் ஊரில் இருக்கமாட்டேன். வெளியூரிலிருப்பேன். முதல் எதிரி பெயர் சந்தோஷ். 2ம் எதிரி பெயர் ஞாபகமில்லை. சம்பவத்தவத்திற்கு மறுநாள் காலை சுமார் 3 வருடங்களுக்கு முன்பு தேதி மாதம் ஞாபகமில்லை. நான் பூவந்தி காவல்நிலையத்திற்கு ஊர்காரர்கள் சென்றிருந்தால் நானும் அவர்களுடன் காவல்நிலையத்திற்கு இறந்தவரது பிரேதத்தை காவல்நிலையத்திற்கு எடுத்து செல்வார்களே என்று சென்றோம். போலீசார் என்னை விசாரிக்கிவல்லை. நான் எந்த தகவலும் போலீசாரிடம் சொல்லவில்லை.

**(அரசு தரப்பில் சாட்சியை பிறழ் சாட்சியாக கருதி, குறுக்கு விசாரணை செய்ய அனுமதி கோரி, அனுமதி வழங்கப்பட்டது. அனுமதியின் பேரில் அரசு தரப்பு குறுக்கு விசாரணை)**

போலீசார் என்னை விசாரித்தார்கள் என்றும் அந்த விசாரணையில் எதிரிகள் இருவரும் சிறுவயதிலிருந்தே நண்பர்கள் என்றும், அவர்கள் மது அருந்திவிட்டு ஜாலியாக சுத்துவார்கள் என்றும், இற்நத இராமராஜனுக்கும், சந்தோஷ்குமார் தாயாருக்கும் கள்ளத்தொடர்பு இருந்ததாகவும், அது தொடர்பாக அவர்களுக்குள் முன்விரோதம் இருந்துவந்த நிலையில் கடந்த 18.06.2021- அன்று எங்கள் ஊரில் மீன் விற்றார்கள் என்றும், எல்லா வீடுகளிலும் மீன் வாங்கி சமைத்திருந்தார்கள் என்றும், அதனால் நானும் எங்கள் ஊரைச்சார்ந்த மலைச்சாமி மகன் மணிகண்டன் என்பவர் சந்தோஷ் வீட்டருகே நின்று பேசிக்கொண்டிருந்தபோது இரவு 10.45 மணி அளவில் டி.எண். 63 TJ 5803 என்ற பல்சர் இருசக்கர வாகனத்தில் சந்தோசும்,

SWARNAM J NATARAJAN Digitally signed by SWARNAM J NATARAJAN Date: 2024.10.23 17:46:58 +0530

கணேஷ்குமாரும், பிள்ளையார் கோவலி ஊரணி பக்கமிருந்து சந்தோஷ்வீட்டிற்கு வந்து சந்தோஷ் வீட்டின் வெளியே கொடியில் காயப்போட்டிருந்த துணிகளை எடுத்துக்கொண்டு பைக்கில் போனார்கள் என்றும், அதனை நான் பார்க்கும்போது சந்தோஷ், கணேஷ்குமார் இருவர் உடைகளிலும் இரத்தமாக இருந்தது என்றும், மறுநாள் காலை மண் புழு குடோன் அருகே இராமராஜன் வெட்டுப்பட்டு இறந்துகிடப்பதை நாங்கள் போய் பார்த்தோம் என்றும், இது குறித்து பூவந்தி காவல் ஆய்வாளர் விசாரித்த போது முதல் நாள் இரவில் இரத்த கரை படிந்த உடையுடன் எதிரிகள் இருவரும் சென்றதை பார்த்தேன் என்று விவரம் கூறியுள்ளேன் என்றால் சரியல்ல. எதிரிகள் உள்ளுர்காரர்கள் என்பதாலும் உண்மையை மறைத்து பொய் சாட்சியம் அளிக்கிறேன் என்றால் சரியல்ல.

'**எதிரிகள் தரப்பு குறுக்கு விசாரணை: இல்லை**

**மறு விசாரணை**. இல்லை

சாட்சி கூறியதை என் வாய்மொழிப்படி தட்டச்சரால் நேரடியாக கணிணியில் தட்டச்சு செய்யப்பட்டு, சாட்சியிடம் படித்துக் காட்டி, அவரால் சரியென்று ஒப்புக் கொள்ளப்பட்ட பின்னர் அவரது கையெழுத்து பெறப்பட்டது.

SWARNAM J NATARAJAN

Digitally signed by SWARNAM J NATARAJAN
Date: 2024.10.23 17:47:04 +0530

முதன்மை மாவட்ட மற்றும் அமர்வு நீதிபதி,
சிவகங்கை

DEPOSITION OF WITNESS.

IN THE COURT OF THE PRINCIPAL DISTRICT COURT, SIVAGANGAI

S.C.No. 70/2021

PROSECUTION WITNESS No - PW- 9

| | | | |
|---|---|---|---|
| Name : | கருப்புசாமி | Caste: | |
| Father Name/Husband name | | Calling: | |
| Village: | | Religion: | |
| Taluk: | | Age: | |

Solemnly affirmed in accordance with the provisions of the Oaths Act, 1969 (Central Act 44 of 1969) on the 23rd day of October 2024.

எதிரிகள் நீதிமன்றத்தில் நேரில் ஆஜர்

**<u>முதல் விசாரணை :</u>**

1) நான் தற்போது திருப்புவனம் நெல்முடிக்கரை குரூப் கிராம நிர்வாக அலுவலராக பணியாற்றி வருகிறேன். கடந்த 19.06.2021-ல் பாப்பாகுடி குரூப் கிராம நிர்வாக அலுவலராக பணியிலிருந்த போது மாலை 4.30 மணி அளவில் பூவந்தி காவல்ஆய்வாளர் தொலைபேசியில் தொடர்பு கொண்டு கருங்குளம் கண்மாயில் இந்த வழக்கில் தொடர்புடைய சந்தோஷ், கணேஷ்குமார் ஆகியோரை கைது செய்ய போகிறோம் வாருங்கள் என்று சொன்னதன் பேரில் நானும் கிராம உதவியாளர் புஷ்பலதா என்பரும் அவர் குறிப்பிட்ட இடத்திற்கு சென்றோம். எங்கள் முன்னிலையில் எதிரிகளிடம் வாக்கு மூலம் வாங்கினார்கள். எதிரிகள் தனித்தனியாக ஒப்புதல் வாக்குமூலம் அளித்தார்கள். அந்த ஒப்புதல் வாக்குமூலத்தில் நானும், கிராம உதவியாளரும் கையொப்பம் போட்டோம். அதனடிப்படையில் எதிரிகள் ஒரு ஜீன்ஸ் பேண்ட், 2 சட்டைகள், ஒரு கைலி, இரத்தக்கரை படிந்த வாள்-1 பல்சர் வண்டி ஆகியவகைளை கைப்பற்றினார்கள். அவர்கள் கைப்பற்றி அத்தாட்சியில் நானும் தலையாரியும் கையெழுத்து போட்டோம்.தனித்தனியாக கொடுத்த ஒப்புதல் வாக்குமூலத்தின் அனுமதிக்கப்பட்ட பகுதி **அ.சா.ஆ.6 மற்றும் அ.சா.ஆ.7-ஆக** குறியீடு செய்யப்படுகிறது. கைப்பற்றுதல் மகஜர்கள் **அ.சா.ஆ.8 மற்றும் அ.சா.ஆ.9**, டி.என்.63 TJ 5803 இருசக்கர வாகனம் முதல் எதிரியின் தாயார் சந்தோஷ் வசம் ஒப்படைக்கப்பட்டது. எதிரி வண்டி ஒர்க்ஷாப்பில் விட்டிருப்பதாக சொன்னதன் பேரில் புகைப்படம் சாட்சியிடம் காண்பிக்கப்பட்டு **சா.பொ.6-**ஆக குறியீடு செய்யப்படுகிறது. மற்ற பொருட்கள் இரத்தக்கரை படிந்த வாள்-1 **சா.பொ.7**, ஜீன்ஸ் பேண்ட் **சா.பொ.8**, நீலம்

SWARNAM J NATARAJAN

Digitally signed by SWARNAM J NATARAJAN
Date: 2024.10.23 17:47:09 +0530

வெள்ளை கலந்த சட்டை **சா.பொ.9**, ஊதா வெள்ளை கட்டம் போட்ட கைலி **சா.பொ.10,** மஞ்சள் ஊதா கருப்பு நிற சட்டை **சா.பொ.11.** ஆய்வாளர் என்னை விசாரித்தார்.

**எதிரிகள் தரப்பு குறுக்கு விசாரணை:**

மொத்தம் 1.15 -1.30 மணி நேரம் சம்பவ இடத்தில் இருந்தோம். நான் கருங்குளம் கண்மாய்க்கு செல்லும் போது ஆய்வாளர் கண்மாய்க்குள் பல்சர் பைக்குடன் எதிரிகளுடன் இருந்தார். கருங்குளம் கண்மாய் என்பது பாப்பாக்குடிக்கு தெற்கே உள்ளது. மண்புழு உரக்குடோனிலிருந்து கருங்குலம் கண்மாய்க்கு செல்லமுடியும். மண்புழு உரக்கிடங்கிலிருந்து திருமாஞ்சோலை ரோட்டிற்கு வராமல் அப்படியே செல்லவும் ஒரு வழி உள்ளது. கருங்குளம் கண்மாய்க்குள் மின் இணைப்போ, ப்ளக்பாய்ண்ட்டோ பிரிண்ட் எடுப்பதற்கு வசதிகள் இல்லை என்றால் சரிதான். பூவந்தி காவல்நிலையத்தில் வைத்து ஒப்புதல் வாக்குமூலம் மற்றும் கைப்பற்றுதல் மகஜர் கையெழுத்திடப்பட்டது என்றும் அங்குதான் கையெழுத்து பெறப்பட்டது என்றால் சரியல்ல. நான் சொல்வது போல் எதிரிகள் எவ்வித ஒப்புதல் வாக்குமூலம் அளிக்கவில்லை என்றும், எதிரிகளிடமிருந்து சான்றுபொருட்கள் கைப்பற்றப்படவில்லை என்றாலும் சரியல்ல.

**மறு விசாரணை**. இல்லை

சாட்சி கூறியதை என் வாய்மொழிப்படி தட்டச்சரால் நேரடியாக கணிணியில் தட்டச்சு செய்யப்பட்டு, சாட்சியிடம் படித்துக் காட்டி, அவரால் சரியென்று ஒப்புக் கொள்ளப்பட்ட பின்னர் அவரது கையெழுத்து பெறப்பட்டது.

SWARNAM J NATARAJAN
Digitally signed by SWARNAM J NATARAJAN
Date: 2024.10.23 17:47:14 +0530

முதன்மை மாவட்ட மற்றும் அமர்வு நீதிபதி,
சிவகங்கை